| | | | |
|---|---|---|---|
| **Headline** | Speaking good English can secure jobs | | |
| **Date** | 22 April 2004 | | |
| **Media Title** | Tamil Murasu | **Section** | Singapore |
| **Page No** | 2 | **Size** | 4colx14cm |

# ஆங்கில மொழிப் புலமை வேலையைக் கட்டிக்காக்கும்

## சிங்கப்பூரருக்கு டாக்டர் இங் ஆலோசனை

சிங்கப்பூரர்கள் ஆங்கில மொழிப் புலமையை மேம்படுத்திக் கொள்ளாவிட்டால் மற்ற ஆசியர்களிடம் வேலைகளை இழக்கக்கூடும் என்று இடைக்கால மனிதவள அமைச்சர் டாக்டர் இங் எங் ஹென் எச்சரித்துள்ளார்.

"நல்ல ஆங்கில மொழி பேசுவோம்" இயக்கத்தை நேற்று தொடங்கி வைத்து டாக்டர் இங் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆசியாவில் உள்ள மற்ற நாடுகள் ஆங்கில மொழியை பள்ளிப் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக சேர்த்துக் கொண்டு வருகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் மலேசியா, தாய்லாந்து, ஜப்பான், கொரியா, சீனா போன்ற நாடுகள் நமது ஆங்கில மொழிப் புலமையை எட்டிப் பிடித்துவிடலாம் அல்லது நம்மை முந்திக் கொண்டு முன்னேறி விடலாம் என்று டாக்டர் இங் கூறினார்.

இந்த ஆண்டின் இயக்கம் சேவைத் தொழில் துறைகளை மையமாகக் கொண்டிருக்கிறது. சுற்றுப்பயணிகளை ஈர்ப்பது இந்த ஆண்டின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

சிங்கப்பூரின் நான்கு அதிகாரபூர்வ மொழிகளில் ஆங்கில மொழி ஒன்று. தமிழ், மலாய், சீனம் ஆகியவை மற்ற மூன்று மொழிகள்.

சிங்கப்பூரின் நான்கு மில்லியன் மக்கள் தொகையில் 71 விழுக்காட்டினர் ஆங்கில மொழிப் புலமை பெற்றவர்கள். பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலமொழி முதல் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் காலனித்துவ அனுபவத்தினால் சிங்கப்பூரர்கள் பலரின் ஆங்கிலமொழி பிரிட்டிஷ் மொழி சாரலை கொண்டிருக்கிறது. இருந்த போதிலும் சிங்கப்பூரர்களிடையே இப்போது, ஆங்கிலத்தோடு தமிழ், மலாய், சீனம் ஆகிய மொழிக் கலவை கொண்ட "சிங்லீஷ்" பிரபலமாகிக் கொண்டு வருகிறது. இதனால், வெளிநாட்டவர்களுக்கு சிங்கப்பூரர்கள் பேசும் ஆங்கில மொழியைப் புரிந்து கொள்ள சிரமப்படலாம்.

சிங்கப்பூரர்களிடையே நல்ல ஆங்கிலமொழி பேசுவதை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 2000ல் "நல்ல ஆங்கில மொழி பேசுவோம்" தேசிய இயக்கத்தைத் தொடங்கியது.